வள்ளுவர் ஓர் இந்துவா?

காலஞ்சென்ற கவியரசர் கண்ணதாசன் அவர்கள், தனது அர்த்தமுள்ள இந்து மதம் இரண்டாம் பகுதியில் 'வள்ளுவர் ஓர் இந்து' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். திருவள்ளுவர் பயன்படுத்தியவேண்டுதல் வேண்டாமை, இருள் சேர் இருவினையும் சேரா இறை வன், வானுறையும் தெய்வம் போன்ற சொல்லாடல்களை வைத்து வள்ளுவர் ஓர் இந்து என்ற முடிவுக்கு வருகிறார். இறுதியில் தமிழரான வள்ளுவர் ஓர் இந்து, இந்துவான வள்ளுவர் ஒரு தமிழரே என்று அந்தக் கட்டுரையை முடிக் கின்றார். கவியரசர் கண்ணதாசனைப் போன்று பல தமிழர் கள் இந்து மதம் நமது மதம் என்ற அறியாமையில் மூழ்கிக் கிடக்கின்றார்கள். மூழ்கிக் கிடப்பதோடு மட்டுமல்லாது, மதச்சார்பற்ற நமது பெருந்தமிழ்ப் புலவர் வள்ளுவரை இந்துவாக நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அத்து டன் ஈடு இணையற்ற தமிழ் நூலான திருக்குறளை இந்து மத நூலாக எண்ணத் துணிகின்றனர். ஆனால் நமது வள்ளுவப் பெருந்தகையோ இந்து மதத்தையும், அதனை இயக்கும் கருவியான பார்ப்பனியத்தையும், இந்து மதத் தின் ஆணிவேராக விளங்கும் வருணாசிரம தர்மத் தையும், மற்றும் இந்து மதத்தின் மூடப் பழக்க வழக் கங்களையும் தனது குறட்பாக்கள் வழியாக சாட்டையடி கொடுப்பதுபோல் கடுமையாகச் சாடுகிறார்.

இந்து மதத்திற்கு அடிப்படையாக விளங்குபவை ரிக், யஜுர் சாம அதர்வணம் ஆகியநான்கு வேதங்கள். மற்றும் பகவத்கீதை, மனு தர்மம், புராணங்கள், இதிகாசங்கள் போன்றவைகள் புனித நூல்களாகக் கருதப் படுகின்றன. இவைகளை அலசி ஆராய்ந்தால் இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக விளங்குவது, பிறப்பினால் ஏற்றத்தாழ்வு களைக் கற்பிக்கும் வருணாசிரம தர்மம். குறிப்பாக பகவத் கீதையும் மனுதர்மமும் பிரம்மாவின் முகத்திலிருந்து பிறந்தவன் பிராமணன் என்றும் மனிதப் பிறவிகளில் அவனே உயர்ந்தவன் என்றும் பெண்களும் சூத்திரர் களும் தாழ்ந்தவர்கள் என்றும் உரைக்கிறது. (மனுதர்மம் அத்தியாயம் 1 சூத்திரம் 31 - பகவத்கீதை அத்தியாயம் 9 சுலோகம் 32)

நமது வள்ளுவரோ இதைக் கடுமையாக மறுத்து

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (குறள் 972)

பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையால் மட்டுமே வேறுபாடு காண முடியும். என்கிறார்.

ஆரியர்களின் மனுதர்மம் புலால் உண்பதை அனுமதிக் கிறது. பசுக்களை யாகத்தில் வெட்டிப் பலியிடவேண்டும் என்றும் யாகத்தில் படைக்கப்பட்ட பசு இறைச்சியை உண் பது தெய்வீகச் செயல் என்றும் உரைக்கிறது. (மனுதர்மம் அத்தியாயம் 5 சூத்திரம் 27 30 35 39). இந்து மதத்தின் மிக முக்கிய நூலான பகவத்கீதை கொலை செய்வதையும் நியாயப் படுத்துகிறது. இதற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டு காந்தியடிகளைக் கொலை செய்த குற்றத்திற்காக பார்ப்பனரான நாதுராம் கோட்சேயைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தியபோது அவர் கீதை காட்டும் இந்து தர்மப்படி காந்தியைக் கொலை செய்தது நியாயமே என்று கூறினார். இந்து மதம் நரபலிக்கும் நியாயம் கற்பிக்கிறது. மகாபாரதத்தில் குருசேத்திரப் போர் தொடங்குவதற்கு முன் பாண்டவர்களை வெற்றி பெறச் செய்வதற்காக அருச்சுனனின் புதல்வர்களில் ஒருவனான அரவானை கண்ணன் நரபலியிட்டதாக குறிப்பிருக்கிறது.

தமிழர்களின் திருக்குறளோ புலால் உண்பதையும் கொலை செய்வதையும் வன்மையாகக் கண்டிக்கிறது.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும். (குறள் 260)

புலால் உண்ணாதவர்களையும் அதற்காக உயிர் களைக் கொல்லாதவர்களையும் எல்லா உயிரினங்களும் வணங்கி வாழ்த்தும் என்கிறது. மற்றுமொரு குறள்

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை. (குறள் 327)

தன்னுயிரே போவதாக இருப்பினும்கூட அதற்காக இன்னொரு உயிரைப் போக்கும் செயலில் ஈடுபடக் கூடாது என்றுரைக்கிறது.

சாய்ந்த கோபுரங்கள்

எழுதுவது: **இளங்கோ**

புராணங்கள் இந்து மதத்தின் அடிப்படை வேர்கள். புராணங்களில் வரும் கதாபாத்திரங்களே இந்து மதத்தில் கடவுள்களாக விளங்குகின்றன. புராணங்கள் இல்லை என்றால் இந்து மதமும் இல்லை கடவுள்களும் இல்லை என்று கூறும் அளவிற்கு புராணங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இப்புராணங்கள் தேவர்-அசுரர் போராட்டாத்தையே முக்கிய கருப்பொருளாகக் கொண்டி ருக்கின்றன. இவற்றை பின்னாள்களில் ஆய்வு செய்த பல வரலாற்று ஆசிரியர்கள் தேவர்-அசுரர் போராட்டங் கள் அந்நாள்களில் நடந்த ஆரியர்-திராவிடர் போராட்டங் களையே குறிப்பதாக எழுதியுள்ளார்கள்.

புராணங்கள் புனையப்பட்ட அன்றைய காலகட்டத்தில் தென்னாட்டில் வாழ்ந்த தமிழர்களே திராவிடர்களாகக் கருதப்பட்டார்கள். திராவிடம் என்ற சொல் தமிழிலிருந்து திரிபுற்ற ஒன்றே (தமிழ்-தமிள-த்ரமிள-த்ரமிட-திரபிட-திராவிட) என்பதை பாவாணர், மு.வரதராசனார் போன்ற அறிஞர் பெரு மக்கள் தங்களின் நூல்களில் விளக்கியுள்ளனர். அந்தத் தமிழர்களையே அசுரர்களாகவும் அவர்கள் எதிர்த்த ஆரியர்களைத் தேவர்களாகவும் தங்களின் புராணங் களில் சித்தரித்திருக்கின்றனர். நல்லவர்களான தேவர் களைக் (ஆரியர்கள்) காக்க தீயவர்களான அசுரர்களை (தமிழர்கள்) கடவுள் அழித்தார் என்று பொருள் பட புராணங்களைப் புனைந்தார்கள்.

இவற்றை அறிந்த நமது வள்ளுவர் தனது குறள் ஒன்றின் வழியாக ஆரியர்களின் இனவெறிக்கு சாட்டையடி கொடுக்கின்றார்.

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான் (குறள் 1073)

தேவர்கள் (ஆரியர்கள்) மனம் போன போக்கில் தீய செயல்களைச் செய்யும் கயவர்களுக்குச் சமமான வர்கள் என்கிறார்.

பொதுவாக, உலகத்திற்குத் தேவையான நீதிக் கருத்துக்களை எழுத முன்வந்த திருவள்ளுவருக்கு இது போன்ற குறள் எழுத வேண்டிய கட்டாயம் ஏன் ஏற்பட்டது. ஆரியர்களால் கற்பிக்கப்பட்ட இன இழிவை தமிழரான வள்ளுவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. என வே எய்யப் பட்ட அம்பை எடுத்து எய்தவன் மேல் எய்வது போல் தேவர் என்ற சொல்லைப் பயன்படுத்தி ஆரியரைக் கயவர் எனக் கடுமையாகச் சாடுகிறார்.

பொதுவாக அன்றைய காலத்தில் பார்ப்பனர்களுடைய தோற்றம் தமிழர்களிடமிருந்து முற்றிலும் மாறு பட்டிருந்தது. தலைமுடியை முன்புறம் நன்றாக மழித்து பின்புறம் தலைமுடியை நீட்டி குதிரை வால் போன்று வளர்த்திருப்பார்கள். வள்ளுவர் இதையும் மறுக்கிறார்

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின் (குறள் 280)

உலகம் பழிக்கக் கூடிய தீய செயல்களை செய்யாமல் விட்டாலே போதும் மழித்தல் நீட்டல் போன்ற புறத் தோற்றங்கள் தேவையில்லை என்கிறார். இக்குறளை ஆழ்ந்து நோக்கினால் புறத் தோற்றத்தின் வழியாகத் தங்களை வேறுபடுத்திக் காட்டும் பார்ப்பனர்கள் உலகம் பழிக்கும் செயல்களைப் புரிந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

(தொடரும்)

பழங்கள்ளு

பண்டைய இலக்கியக் காட்சி

வழுதி
(ஒரு பேப்பருக்காக)

இறகு முளைத்துப் பறந்ததுவோ?

பாக்குவெட்டி பற்றி நீங்கள் அறிவீர்களோ? புலம்பெயர்ந்த இந்தத் தேசத்தில் பாக்குவெட்டி பற்றி அறிய ஏது ஏதும் இல்லைத்தான். வெற்றிலை பாக்கு என்ற தாம்பூலம் தரிக்க இங்கு யாருமில்லை. சிலவேளை யாருமிருந்தாலுங் கூட சீவல்பாக்குக் கிடைப்பதால் பாக்குவெட்டி என்ற கருவியை யாரும் பாவிக்க மாட்டார்கள்.

நாம் ஊரிலிருந்த காலங்களில் பாக்குவெட்டி பாவிக்காத நாளே கிடையாது. என் அம்மாவிடம் பெரிய பாக்குவெட்டி இருந்தது. தினசரி அதில் நான் பாக்கு வெட்டுவேன். பாக்கு வெட்டப்போய் விரலை நறுக்கியதும் உண்டு. அம்மாவின் ஞாபகமாக அந்தப் பாக்குவெட்டியை இங்கு கொண்டு வந்தேன். என் மனையாள் இப்போது பலாக்கொட்டை நறுக்கப் பாக்குவெட்டியைப் பயன்படுத்துகிறார். பாக்குவெட்டி அப்படிப் பல பயன்பாடுகளைக் கொண்டது.

ஆறாம்வகுப்பில் நெம்புகோல் தத்துவம் படிக்கவும் பாக்குவெட்டி பயன்படுத்தப்பட்டது. அப்படி நெம்புகோல் தத்துவம் படிக்கப் பயன்பட்ட, பிறபொருட்களாவன, துலா, குறடு, கப்பி..போன்ற பல.

சரி, இந்தப் பாக்குவெட்டி ஒரு புலவனுக்கு எத்தனை விதமாகப் பயன்பட்டிருக்கிறது என்பதைப் பாருங்கள்.

அதுவும் பாக்குவெட்டி காணாமல் போனதுக்குப் பிற்பாடுதான் அதன் பயன்பாடு புலவருக்கு உறைக்கிறது. எது எதற்குப் பாக்குவெட்டி புலவருக்குப் பயன்பட்டிருக்கிறது என்று பார்ப்போம்.

'விறகு தறிக்க கறிநறுக்க
வெண்சோற்றுப்புக்கு அடகுவைக்க
பிறகு பிளகு கிடைத்த தென்றால்
நாலாகப் பிளக்க
பறகு பறகென்று சொறிய
பதமாயிருந்த பாக்குவெட்டி
இறகு முளைத்துப் பறந்ததுவோ
எடுத்தீராயிற் கொடுப்பீரே.'

பாடலின் பொருள் சுலபம்தான் என்றாலும் சுருக்கமாக, விறகுவெட்டவும், காய்கறி நறுக்கவும், சோற்றுக்கு உப்பு இல்லையென்றால் அடகுவைத்து உப்பு வாங்கவும், பிளகு அதாவது பாக்குக் கிடைத்தால் அதை வெட்டவும், கைக்கெட்டாத முதுகுப் புறத்தில் கடித்தால் அதை எட்டிச் சொறியவும் இதம் பதமாயிருந்த பாக்குவெட்டியை இப்போது காணவில்லை.

அது இறகு வைத்துப் பறக்காது அதை உங்களில் யாரோ ஒருவர் தான் எடுத்திருக்க வேண்டும். எடுத்தால் தயவுசெய்து அதைத் தாருங்களேன். இதுவே அந்த எளிய ஏழைப் புலவனின் கோரிக்கை.

நாங்கள் பாக்குவெட்டியை மாத்திரமா தொலைத்து விட்டு இருக்கிறோம்? தேடியும் கிடைக்கப்பெறாத பழம்பெரும் நாகரீகத்தையும், பண்பாடுகளையும் அல்லவா நாளாந்தம் தொலைத்துக் கொண்டிருக்கின்றோம்.

ஹா ஹா ஹா...

டாக்டர் : உங்கடை ஞாபக மறதிக்கு மருந்து எடுத்துக் கொண்டு போனியளே? இப்ப எப்படி இருக்கு?

நோயாளி: இன்னும் குறைய இல்லை எண்டு நினைக்கிறன்

டாக்டர் : எதை வைச்சுச் சொல்லுறியள்?

நோயாளி: அதுதான் திரும்பவும் உங்களிட்டையே மருந்தெடுக்க வந்திருக்கிறேனே?

We have been helping our client to make the most of their money for over 35 years. How have we been able to stay in business for so long? Well that is quite simple. We understand our clients and provide them with the personal service they deserve.

- We are truly independent and can provide advice across the whole market.
- Our service focuses on your needs and meeting your financial goals.
- We provide ISA portfolios to match all types of investors.
- We provide comprehensive Inheritance Tax solutions, potentially saving 40% tax.

ARM Associates can promise you an expert, individually-tailored and cost-effective service. Whether you need specific advice or comprehensive financial planning, we can help.

ARM Associates
Professional Investment Advisers

For a free initial chat, to discuss your requirements, please call:
Mr P.Srinivasan CertPFS
Mr Suhan Srinivasan (Dip PFS, Economics BSc)
Tel: 020 8763 2221 / Fax: 020 8763 2220
Email: sri@srinivasan.co.uk / Web: www.srinivasan.co.uk
32 Abbots Lane, Kenley, Surrey, CR8 5JH.

FSA
Authorised and Regulated by the Financial Services Authority.
The value of investments may fall as well as rise.